வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 03.04.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 87 பக்கங்கள் : 08

## மத்திய கிழக்குப் போரை முடிவுக்கு கொண்டு வருக!

### ஐ.நா. செயலர் வலியுறுத்து



ஜெனிவா, ஏப். 03

மத்திய கிழக்கில் நிலவும் போரை உடன் முடிவுக்கு கொண்டுவருமாறு ஐ.நா. பொதுச்செயலாளர் அவசர கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதை ஈரான் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த மோதலால் ஏற்படும் கடுமையான பொருளாதார பாதிப்புகள் மற்றும் மக்களின் சொல்லொணாத் துயரங்கள் குறித்து ஐ.நா. செயலாளர் கடும் கவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, அமைதியை நிலைநாட்ட தனது சிறப்புத் தூதரை மத்திய கிழக்குக்கு அனுப்புவதற்கு அவர் உத்தேசித்துள்ளார். (அ)

## காணிகள் சுவீகரிப்புக்கு எதிராக பச்சிலைப்பள்ளியில் போராட்டம்!

### நில அளவை நடவடிக்கை கைவிடப்பட்டது



கிளிநொச்சி, ஏப். 03

கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊர்வணிக்கன்பற்று கிராமத்தில், இராணுவத் தேவைக்காக முன்னெடுக்கப்படவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நேற்றுக் காலை பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மக்களின் பலத்த எதிர்ப்பினைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்டிருந்த நில அளவை நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் 4 ஆவது பட்டாலியன் படைப்பிரிவின், மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணி அமைப்பதற்காக 25.73 ஏக்கர் தனியார் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் இந்த நில அளவை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 07

## தமிழ்த் தேசிய கட்சிகளை ஓரணியில் அணி திரட்டும் முயற்சி தொடர்கிறது!

### அடுத்த வாரமும் முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 03

இனப்பிரச்னைக்கான தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் ஆகிய விவகாரங்களில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாட்டை எட்டும் நோக்கில், தமிழ்ச் சட்டத் தரணிகள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டாவது சந்திப்பு அடுத்த வார தொடக்கத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளை 07

## அர்ச்சுனா உள்ளிட்ட 2 வைத்தியர்கள் மீது நிகழ்நிலை காப்பு சட்டத்தின் கீழ் வழக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 03

தெல்லிப்பழை வைத்தியசாலை புற்று நோய்ப் பிரிவு வைத்தியர் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பினார்கள் எனும் குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்ட இரு வைத்தியர்களுக்கு எதிராக நிகழ்நிலை காப்பு சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை அவதூறு பரப்பினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள வைத்தியர் ஒருவர் சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையாகி இருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் 07

## பொருளாதார ஸ்திரத்தன்மையை நீண்ட காலம் தக்கவைக்கவேண்டும்

### நாணய நிதியம் இலங்கையிடம் கோரிக்கை



கொழும்பு, ஏப். 03

தற்போது எட்டப்பட்டுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மையை நீண்டகாலத்துக்குத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் கீழ் இலங்கை அடைந்துள்ள பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தற்போதைய அரசின் நிதி 07

## மனோ கணேசன் அணி ஜனாதிபதியுடன் பேச்சு



கொழும்பு, ஏப். 03

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் உள்ளிட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க காவை சந்தித்தனர்.

மலையக மக்கள் எதிர்கொள்கின்ற கல்வி, வீடு 07

## வீடு தீக்கிரை!

வவுனியா, ஏப். 03

வவுனியா மகாறம்பைக்குளம் மதீனாநகர் பகுதியில் வீடு ஒன்றில் திடீர் தீ பரவல் ஏற்பட்டதையடுத்து அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளன.

நேற்று மாலை குறித்த வீட்டில் யாரும் இல்லாத நேரம் வீட்டின் உள்பகுதி தீயில் எரிவதை 07

## ஏப்ரல் 16,17 இல் அரச ஊழியர் இணையவழி வேலை?

### பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, ஏப். 03

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியில், எரிபொருள் மற்றும் வலுசக்தியைச் சேமிக்கும் நோக்கில் ஏப்ரல் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் அரச சேவைகளை இணையவழி ஊடாக முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது.

அரச சேவைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவின் மூன்றாவது கூட்டம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இணையவழியில் நேற்று முன் தினம் நடைபெற்ற போதே இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு 07

## அமைச்சர்கள், அதிகாரிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவு மாற்றம்!

கொழும்பு, ஏப். 03

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் கொடுப்பனவுகளைக் கணக்கிடும் முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுடன் நீண்டகால உடன்படிக்கை ஏற்படுத்த இலங்கை முன்வரவேண்டும்!

## அந்நாட்டு பிரதி வெளியுறவு அமைச்சர் கருத்து

கொழும்பு, ஏப். 03

இலங்கை தனது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கத்திய நாடுகளின் தடைகளுக்குப் பயப்படாமல், ரஷ்யாவுடன் நீண்ட கால இறையாண்மைமிக்க உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என ரஸ்சிய பிரதி வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரே ருடென்கோ அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், ஆசிய நாடுகள் அமெரிக்காவின் தீர்மானங்களில் தங்கியிருப்பதைத் தவிர்த்து, சுயமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் இதுவெனக் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் தடைகளில் இருந்து வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் எதிர்வரும் வரும் 11 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், அதற்குள் ரஷ்யாவுடன் உடன்படிக்கைகளை எட்டுவது சவாலானது என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இதற்குப் பதிலளிக்கும் வகை யில் கருத்து வெளியிட்ட ருடென்கோ, டொலர் அல்லது யூரோவுக்குப் பதிலாக ரஸ்சிய ரூபிள், இந்திய ரூபா அல்லது சீன யுவான் போன்ற மாற்று நாணயங்களைப் பயன்படுத்தி வர்த்தகத்தை முன்னெடுக்க ரஷ்யா தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

தற்போது உலகம் ஒற்றை துருவ ஆதிக்கத்திலிருந்து மாறி, பல துருவ உலக ஒழுங்கை நோக்கி நகர்ந்து வருவதாகவும், இதில் ஆசிய நாடுகள் தமது பலத்தை நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், சுற்றுலாத்துறையை மேம்படுத்த ரஸ்சிய பயணிகள் இலங்கையில் தங்களது வங்கி அட்டைகளை நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய கட்டண முறைமைகளை உருவாக்குமாறும் அவர் யோசனை தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் ஆசியாவின் எரிசக்திப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள நிலையில், சுதந்திரமான தீர்மானங்களை எடுக்கும் நாடுகளுக்குத் தோள் கொடுக்க ரஷ்யா தயாராக இருப்பதாகவும் அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

(அ)

# வட்டு இந்துக் கல்லூரி உயர்தரத்தில் சாதனை

யாழ்ப்பாணம், ஏப். 03

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பானதாக அமைந்துள்ளது.

அதற்கமைய கலைத்துறை, வணிக துறையை சேர்ந்த மாணவர்கள் மூவர் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளதுள்ளதுடன் அனைத்து துறைகளிலும் இருந்தும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய கலைத்துறையில் ச.டிலக்சனா (3ஏ), செ. அர்ச்சனா (3ஏ), ச. அகல்யா (2ஏ,பி), த. தேனுசன் (2ஏ,பி), வி. விதுசா (2ஏ,சி), யோ. சன்சிஹாறா (ஏ,2பி) சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதுடன் வர்த்தக பிரிவில் தெ. நிலோஜன் (3ஏ), சி. சபித்தா (2பி,சி), க. காருண்யா (3பி) ஆகியோர் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிரியல் தொழில் நுட்பம் பிரிவில் அ.பேரெழிலன் (2பி,சி), ல.தர்சினி (ஏ,பி,சி), ஜ.சஜீனா (பி,2சி) பெற்றுள்ளதுடன் பொறியியல் தொழில்நுட்பம் பிரிவில் யோ.கோபிகிருஷ்ணா (பி,2சி), த. ரதுர்ஷன் (2சி,எஸ்) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கணிதப் பிரிவில் சி. டிலக்சி (ஏ,2பி,), அ. தேனுஜன் (ஏ,2பி), இ. இசையமுதன் (ஏ,2பி), வ. டர்சிகன் (2பி,சி) ஆகியோர் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதுடன் விஞ்ஞான பிரிவில் தே. ஐங்கரன் (பி,சி,எஸ்) பெறுபேற்றைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடங்களோடு ஒப்பிடுகின்ற போது தற்போது வெளியாகி உள்ள பெறுபேறுகளானது வட்டு இந்து கல்லூரியில் சிறந்ததாக அமைந்துள்ளதுடன் வலிகாமம் வலய மட்டத்திலும் சிறந்த பெறுபேறுகளாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யாழ். துணைவேந்தர் வேல்நம்பிக்கு புத்தூரில் ஞாயிறன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தர் பேராசிரியர் தி. வேல்நம்பிக்கு - அவர் பிறந்த இடமாகிய புத்தூர் கிராமத்தில் கல்வி பயின்ற சோமாஸ்கந்த கல்லூரியில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாராட்டு விழா நடைபெற உள்ளது.

சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சி திரிகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சமய தலைவர்களின் ஆசியுரைகள் சமூகத் தலைவர்களின் வாழ்த்துரைகள் மற்றும் பாராட்டுரைகள் என்பன இடம் பெற உள்ளன.

வேல்நம்பி குறித்தான ஆவணப்பட வெளியீடு மற்றும் புதுவை நம்பி என்ற பாராட்டு விழா சிறப்பு மலர் வெளியீடு என்பன இடம்பெற உள்ளன.

முன்னதாக விழா நாயகர் புத்தூர் கிழக்கு காளி கோவிலில் இருந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட உள்ளார்.

(அ)

# கமநல சேவை நிலையங்கள் ஊடான உரம் விநியோக முறைமை தோல்வி!

கொழும்பு, ஏப். 03

கமநல சேவை நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் உர விநியோக முறைமை தோல்வியடைந்துள்ளதாக தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

ஒரு போகத்திற்குத் தேவையான முழுமையான உரத்திற்கான தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி உரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவது, விவசாயிகளைப் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நகரங்களில் உள்ள வர்த்தகர்களிடம் தமக்குத் தேவையான அளவு உரத்தைப் பெற்றுக்கொண்டு, அறுவடையின் பின்னர் பணத்தைச் செலுத்தும் வசதி காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறையின் கீழ் ஒரு ஏக்கருக்கான உரத்தைப் பெற்றுக்கொள்ள சுமார் 75,000 ரூபாய் பணத்தை முன்கூட்டியே செலுத்த வேண்டியுள்ளது.

அத்துடன், உரத்திற்கான போக்குவரத்துச் செலவையும் விவசாயிகளே ஏற்க வேண்டியுள்ளதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் 25,000 ரூபாய் உர மானியம் போதுமானதல்ல எனவும், இது ஒரு ஏக்கருக்குத் தேவையான உரத்தின் பாதியைக்கூடப் பெற்றுக்கொள்ள உதவாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உரத்தை உரிய காலப்பகுதிகளில் இடத் தவறுவதால் இம்முறை சிறுபோக விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# கடும் நோய்களினால் புதிக்கப்பட்டோர் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும்

## சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 03

தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக, நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதிக அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீரிழிவு, இதய நோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த வெப்பத்தினால் உடல்நிலை மோசமடைந்து உயிரிழப்பு கூட ஏற்படலாம் என சுகாதார அமைச்சின் சமூக விசேட வைத்திய நிபுணர் இனோகா சுரவீர தெரிவித்துள்ளார்.

கடும் வெப்பத்தினால் தசைப் பிடிப்பு, அதீத சோர்வு மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய பக்கவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

விவசாயிகள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் போன்ற வெளியில் பணிபுரிவோர் அதிகளவில் நீர் அருந்துவதுடன் மதுபானம், கோப்பி மற்றும் அதிக இனிப்புள்ள பானங்களைத் தவிர்க்க வேண்டும்.

இளநீர், தேசிக்காய்சாறு, தோடம்பழச் சாறு போன்ற பானங்களையும், வெள்ளரிக்காய் மற்றும் தர்பூசணி போன்ற உணவுகளையும் உட்கொள்வது சிறந்தது என வைத்தியர் சந்தனி விதான தெரிவித்துள்ளார்.

காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியில் செல்வதைத் தவிர்ப்பது நல்லது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 6 வருடங்களில் 14 இலட்சத்துக்கும் அதிகமானோர் வெளியேற்றம்!

கொழும்பு, ஏப். 03

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான ஆறு ஆண்டு காலப் பகுதியில் சுமார் 14 இலட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இக்காலப்பகுதியில் மொத்தம் 14 இலட்சத்து 10 ஆயிரத்து 995 இலங்கை பிரஜைகள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த 2022 ஆம் ஆண்டிலேயே அதிகளவானோர் புலம்பெயர்ந்துள்ளனர்.

குறிப்பாக, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் தலா 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு தேடிச் சென்றுள்ளனர்.

இலங்கையர்கள் அதிகளவில் விரும்பிச் செல்லும் நாடாக குவைத் முதலிடத்தில் உள்ளதுடன், கடந்த ஆறு ஆண்டுகளில் அங்கிருந்து 3 இலட்சத்து 17 ஆயிரத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் பெறப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கட்டார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேலதிகமாக ருமேனியா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கும் கணிசமானோர் வேலைவாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கபில சந்திரசேனவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 03

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளரான கபில சந்திரசேனவுக்கு 17ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இவரை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

(அ)

# இலவச மருத்துவ முகாம் இன்று!

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ் மருத்துவ சங்கமும் யாழ்.மருத்துவ பிரதிநிதி சங்கமும் இணைந்து நடத்தும் 3ஆவது இலவச மருத்துவ முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த இலவச மருத்துவ முகாமில் பொது வைத்திய நிபுணர், குழந்தை நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர், மகப்பேறு மற்றும் பெண் நோய்கள் நிபுணர், தோல் வைத்திய நிபுணர் மற்றும் பொது மருத்துவ நிபுணர் போன்ற வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ள உள்ளனர். அத்துடன் குருதிப் பரிசோதனை மற்றும் உடற் திணிவுச் சுட்டி போன்றவையும் கணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
03.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## குண்டுவீச்சு நடத்தாமல் ட்ரம்ப் கரிபியனில் தொடுத்திருக்கும் போர்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மத்திய கிழக்கில் தனது அடங்காக் குதிரை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக நடத்திவரும் போரும் அதன் விளைவாக உலக நாடுகள் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடியும் கரிபியன் பிராந்தியத்தில் சின்னஞ் சிறிய தீவான கியூபாவுக்கு எதிராக ட்ரம்ப் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்கள் மீது உலகின் கவனம் திரும்புவதை தடுக்கின்றன.

சுருக்கமாகச் சொல்வதனால் குண்டுமாரி பொழிந்து ஈரானைத் துவம்சம் செய்துவரும் அமெரிக்கா குண்டு வீசாமல் கியூபாவுக்கு போரை நடத்திக் கொண்டிருக்கிறது. இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்குள் பிரவேசித்த சர்வதேச விவகாரங்களைக் கையாளுவதில் ட்ரம்ப் ஒரு "பள்ளிக்கூட வம்புச் சண்டைக்காரன்" போன்று நடந்து வருகிறார்.

வெனிசூலாவின் ஜனாதிபதி மதுரோ போதைப்பொருள் கடத்தல் வியாபாரக் குழுமம் ஒன்றின் தலைவராக இருப்பதாக ஆதாரமின்றி குற்றம் சுமத்தி ட்ரம்ப் அந்த நாட்டின் மீது தாக்குதலை நடத்தி அவரையும் மனைவியையும் கடத்திச்சென்று நியூயோர்க்கில் சிறையிடைத்து வைத்திருக்கிறார்.

வெனிசூலாவின் எரிசக்திவள சொத்துக்களைக் கைப்பற்றிய பிறகு கியூபாவுக்கான அந்த நாட்டின் எண்ணெய் விநியோகங்களைத் துண்டித்த அமெரிக்கா அந்த சின்னஞ்சிறிய கரிபியன் தீவுக்கு எந்தவொரு நாட்டில் இருந்தும் எண்ணெய்க் கப்பல்கள் வராமல் தடுக்க கடல் முற்றுகையை மேற்கொண்டிருக்கிறது. ரஷ்ய எண்ணெய்க் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கியூபாவை வந்தடைந்தாக செய்திகள் வெளியாகின.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் கியூபா மக்கள் சொல்லொணா இடர்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 83 சதவீதமான மின்சார உற்பத்திக்கு எண்ணெயை நம்பியிருக்கின்ற ஒரு நாட்டுக்கு எண்ணெய் கிடைப்பதை தடுத்து கடல் முற்றுகையை செய்தால் நிலைவரம் எத்தகையதாக இருக்கும் என்பதை புரிந்துகொள்வதில் எடருக்கும் சிரமம் இருக்காது.

ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக கியூபாவை ஆட்சி செய்து வரும் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அகற்றி அமெரிக்காவின் சொற்படி செயற்படக்கூடிய அரசாங்கம் ஒன்றை அந்த நாட்டில் நிறுவுவதே தனது நடவடிக்கைகளின் நோக்கம் என்று வெளிப்படையாகவே கூறுகிறார்.

எண்ணெய்த் தட்டுப்பாட்டினால் கியூபாவில் மூன்று மின்சார உற்பத்திக் கடமைப்புக்கள் செயலிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மின்சார தட்டுப்பாட்டின் விளைவாக நிருவாகச் செயற்பாடுகள் பெருமளவில் முடங்கிப் போயிருக்கின்றன. தலைநகர் ஹவானாவிலும் ஏனைய நகரங்களிலும் வீதிகளில் குப்பை கூளங்கள் தேங்கிக் கிடக்கின்றன. மரக்கறி உணவு வகைகள் சந்தைகளில் அழுகிப் போகின்றன. அரசாங்க அலுவலகங்களும் தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன.

சர்வதேச சட்டங்களை மீறும் இந்த கிறிமினல் நடவடிக்கைகள் குறித்து எந்த விதமான அசௌகரியத்தையும் உணராத ட்ரம்ப் பதிலாக கியூபாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த அமெரிக்க ஜனாதிபதி என்ற வரலாற்றுப் பெருமை தனனை வந்து சேரப்போகிறது என்று குதூகலிக்கிறார்.

கியூபாவுக்கு எதிரான இந்த கொடூரமான நடவடிக்கைகளை அந்த நாட்டில் கம்யூனிஸ்ட் புரட்சி வெற்றி பெற்றதற்கு பிறகு அமெரிக்கா 1960 களின் ஆரம்பத்தில் இருந்து விதித்த தடைகளின் பின்புலத்திலேயே நோக்க வேண்டும்.

கியூபாவுக்கு எதிரான ட்ரம்பின் ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளை உலகம் கண்டனம் செய்யத் தயங்குகிறது. அவரின் இன்றைய போக்கை உலக நாடுகள் ஐக்கியப்பட்டு எதிர்க்காவிட்டால் எந்த நாட்டினதும் வாசற்படிக்கு அவரின் அடாவடித்தனங்கள் வருவதைத் தடுக்க முடியாமல் போகும்.

# ஷமிந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட இருவருக்கு திறந்த பிடியாணை

கொழும்பு, ஏப். 03

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் ஏர்பஸ் விமானக் கொள்வனவு கொடுக்கல் வாங்கல் முறைகேடு தொடர்பில், முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் மகன் ஷமிந்திர ராஜபக்ஷ மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் மனைவி ஆகியோரை கைது செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான் அசங்க போதராகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். ஏர்பஸ் விமானக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இவர்கள் இருவரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட திறந்த பிடியாணைகளை இலங்கையின் அனைத்து விமான நிலையங்களுக்கும் அனுப்பி வைக்குமாறு நீதிவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, சந்தேகநபர்கள் நாட்டுக்குள் வருகை தரும் பட்சத்தில் அவர்களை உடனடியாகக் கைது செய்து, அது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# குடிநீர் தட்டுப்பாட்டை கண்காணிக்க விசேட செயல்பாட்டு குழு நியமனம்

கொழும்பு, ஏப். 03

குடிநீர் தட்டுப்பாட்டைக் கண்காணிக்கவும் முகாமைத்துவம் செய்யவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபையின் தலைவர் மற்றும் பொது முகாமையாளரினால் விசேட செயல்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நிலவும் வறட்சியான வானிலையால் நீர் ஆதாரங்கள் வேகமாக வற்றி வருவதையும், அதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள நீர் உற்பத்தித் திறனை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, நீர் உற்பத்தி மற்றும் விநியோகத்தைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகளை கொண்ட இந்த விசேட செயல்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, நீர் ஆதாரங்களில் நிலவும் பிரச்சினைகள், நீர் உற்பத்தித் திறன் மற்றும் விநியோக முறைகளைத் தொடர்ச்சியாக கண் காணிப்பதுடன், அடையாளம் காணப்பட்ட காலப்பகுதிகளுக்குள் தினசரி மற்றும் வாராந்த நிலைமைகளை மீளாய்வு செய்யும்.

இதற்கமைய, தற்போதைய நிலைமைகள் தொடர்பான முகாமைத்துவ அறிக்கைகளை சமர்ப்பிக்கவும், சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து போதுமான நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தவும் எதிர்பார்ப்பதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இதன் மூலம் எதிர்காலத்தில் நாளாந்தம் நீண்ட நேரத்துக்கு நீர் விநியோகம் தடைப்படுவதை தவிர்க்கவும், அனைத்து நுகர்வோரும் தங்களது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீரைப் பகிர்ந்தளிக்கவும், கட்டுப்படுத்தவும் மற்றும் முகாமைத்துவம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். வறி வரும் நீர் ஆதாரங்கள் வழமைக்கு திரும்பும் வரை இந்தக் குழு செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சதொச ஊடாக 5,000 மெற்றிக் தொன் அரிசி விநியோகிக்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 03

எதிர்வரும் சிங்கள் மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் அரிசி வியாபாரிகளினால் ஏற்படுத்தப்படக்கூடிய செயற்கையான அரிசித் தட்டுப்பாட்டை முறியடிக்க, சதொச ஊடாக 5,000 மெற்றிக் தொன் அரிசியைச் சந்தைக்கு விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் தற்போது போதியளவு அரிசி கையிருப்பு உள்ள போதிலும், பொதுமக்களிடையே நிலவும் தட்டுப்பாடு குறித்த அச்சத்தைப் போக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன, உள்நாட்டுச் சந்தையில் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி வகைகளுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அவற்றுக்குப் பதிலாக பொன்னி சம்பா மற்றும் பால் பொன்னி உள்ளிட்ட மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ஒரு குறிப்பிட்ட அளவிலான அரிசியை இறக்குமதி செய்ய வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலைச் சாட்டி சில மொத்த வியாபாரிகள் விலைகளை உயர்த்த முற்படுவதாகவும், ஆனால் பண்டிகைக் காலத்திற்காகப் பொருட்களை விலையேற்றமின்றி விநியோகிக்க இறக்குமதியாளர்கள் உடன்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## பஸ்- மோ. சைக்கிள் விபத்து பாடசாலை மாணவன் பலி!

கண்டி, ஏப். 03

கண்டி - திகன வீதியில், பல்லேகலை இராணுவ முகாமுக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். ஒருவர் காயமடைந்துள்ளார்.

கண்டியில் உள்ள முன்னணி பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் ஏற்பாட்டு பணிகளுக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு பாடசாலை மாணவர்கள், நேற்று வியாழக்கிழமை (02) காலை பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இந்த விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றைய மாணவன் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் உயர்தரப்பிரிவில் கல்வி கற்று வந்த மாணவனே உயிரிழந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 03 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவிதியை




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**இடபம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமையை கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**கடகம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். சக ஊழியர்களைப் அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும்.விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் வைத்து உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம்செலுத்துவதுநல்லது. பொறுமைதேவைப்படும்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.




யாழ்ப்பாணம் - சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவத் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

## யாழில் நன்னீர் திட்டத்தால் 1272 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 03

தொண்டமனாறு களப்பை மூடி மேற்கொண்ட நன்னீர் திட்டத்தால் 1272 மீன்பிடி குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன என்று வட மாகாண மீனவ சங்க பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "தொண்டமனாற்றை அண்மித்த பகுதிகளை நன்னீராக்கும் திட்டத்தால் மீனவ மற்றும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

மழை காலங்களில் அச்சுவேலி- தம்பாலை உட்பட்ட பகுதிகளில் வெள்ளம் தேங்கும் போது அவர்கள் அந்த நீரை வெளியேற்றுவதற்காக கடலுக்குள் நீர் செல்லக் கூடிய வழிவகைகளை மேற்கொள்வார்கள். தற்போது கடலுக்கு நீர் செல்ல முடியாதவாறு வான் கதவுகள் மூடிக் காணப்படுவதனால் விவசாயம் கூட செய்ய முடியாதவாறு நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. இந்த நன்னீர் திட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து 1272 நன்னீர் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன."- என்றார்.

(எ-05)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஏப். 03

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் பூரணை தினத்தில் இடம்பெறும் திருவாசகம் முற்றோதல் நேற்று முன்தினம் அதிகாலை 05.00 மணி முதல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் பல ஓதுவார்கள் இணைந்து திருவாசக முற்றோதலில் ஈடுபட்டனர். (எ-08)

## "கல்விக்கு வறுமை தடையல்ல"

யாழ்ப்பாணம், ஏப். 03

2025ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று, உயிரியல் தொழில்நுட்பத் துறையில் உயர்கல்வி பயிலும் வாய்ப்பை பெற்றுள்ள யாழ். ஊர்காவற்றுறையை சேர்ந்த அந்தோனியார் கல்லூரி மாணவி தேவதாஸ் கிஷானிக்கு எனது இதயம் கனிந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.

அவரது முகநூல் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில்



முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 27ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை மிகுந்த பெருமைக்குரிய சாதனையாகும்.

வாழ்க்கைப் பயணத்தில் எதிர்நோக்கிய கடுமையான சவால்கள், குறிப்பாக தந்தையை இழந்த துயர நிலையிலும் மன உறுதியுடனும் விடா முயற்சியுடனும் கல்வியில் தொடர்ந்து முன்னேறியமை, சமூகத்துக்கே ஒரு ஊக்கமூட்டும் முன்னுதாரணமாக திகழ்கிறது.


இத்தகைய மாணவர்களின் சாதனைகள், வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கும், எதிர்கால தலைமுறையின் நம்பிக்கைக்கும் வலுச் சேர்க்கின்றன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அவரது உயர்கல்விப் பயணம் மேலும் சிறக்கவும், எதிர்காலத்தில் நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயனளிக்கும் சிறந்த நிபுணராக உருவெடுக்கவும் என் மனமார்ந்த வாழ்த்துகள்"- என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-05)

## போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது!

வவுனியா, ஏப். 03

வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.



வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 5 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 1500இற்கும் அதிகமான போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (எ-10)

## விபத்தில் சிக்கி ஒருவர் மரணம்

மன்னார், ஏப். 03

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் - மதவாச்சி வீதியில் குடியிருப்பு சந்திக்கு அருகில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.

தலைமன்னார் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவர் வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ட்ரம்பின் உரையை தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உயர்வு

வாஷிங்டன், ஏப். 03

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரான் தொடர்பில் வெளியிட்ட கருத்தை தொடர்ந்து, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

முக்கிய கடல் வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணையில் நிலவும் தடைகள் விரைவில் நீங்கும் என்ற எதிர்பார்ப்பு ட்ரம்ப்பின் உரையின் மூலம் தகர்க்கப்பட்டதே இதற்கு காரணமாகும்.

ட்ரப்பின் உரை தொடங்குவதற்கு முன்னர் ஒரு பீப்பாய் பிரெண்ட் கச்சாய் எண்ணெயின் விலை 100 அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

உரையின் போது விலையில் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்ட போதிலும், இறுதியில் அது சுமார் 4 சதவீதத்தால் அதிகரித்து, தற்போது ஒரு பீப்பாய் 105. 38 டொலர்களாக உயர்ந்துள்ளது.

உலகின் மொத்த எரிசக்தி தேவையில் சுமார் 20 சதவீதம் இந்த குறுகிய கடல் வழிப்பாதை ஊடாகவே கொண்டு செல்லப்படுவதால், இது உலக பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானது.

கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தாக்குதல்களுக்குப் பதிலடியாக, இந்தக் கடல் வழிப்பாதையைப் பயன்படுத்தும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் எச்சரித்ததையடுத்து, நிலைமை இன்னும் முழுமையாக வழமைக்குத் திரும்பவில்லை.

ஆட்சி மாற்றம் அல்லது ஈரானின் உட்கட்டமைப்புகளை அழிப்பது குறித்து ட்ரம்ப் விடுத்த கடுமையான எச்சரிக்கைகள், விநியோக சங்கிலிக்கு மேலும் அச்சுறுத்தலாக அமையும் என்று முதலீட்டாளர்கள் அஞ்சுவதே கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு காரணம் என்று பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம் இலங்கைக்கு பாதிப்பில்லை

கொழும்பு, ஏப். 03

கிழக்கு இந்தோனேஷியாவில் நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால், இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

கிழக்கு இந்தோனேஷியாவில் உள்ள டெர்னாட் நகரின் கடற்கரைக்கு அப்பால், வடக்கு பகுதி கடலில் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அருகிலுள்ள தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1,000 கிலோ மீற்றர் தொலைவுக்குள் அபாயகரமான சுனாமி அலைகளை ஏற்படுத்தக்கூடும் என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. (எ)

# வாகன மோசடியில் ஈடுபட்ட 3 சந்தேகநபர்கள் சிக்கினர்!

கொழும்பு, ஏப். 03

பதிவு உரிமம் இன்றி வாகனங்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

போலி ஆவணங்களைத் தயாரித்து வாகன மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் குறித்து அப்பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீகஹவத்த மற்றும் கந்தானை பொலிஸ் பிரிவுகளில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 3 கார்கள், 2 ஜீப் ரக வாகனங்கள், ஒரு லொறி மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் 21, 39 மற்றும் 44 வயதுடைய கந்தானை மற்றும் மீகஹவத்த பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## இணைய வழி நிதி மோசடி:

# 9 வெளிநாட்டவர்கள் நேற்று விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஏப். 03

இணைய வழியிலான நிதி மோசடிகளுக்கு பயன்படுத்தப்படும் சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மின்னணு உபகரணங்களுடன், 09 வெளிநாட்டவர்கள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

சிங்கப்பூரிலிருந்து நேற்று அதிகாலை 12. 50 மணியளவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஒரு குழுவினரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இந்தோனேஷிய நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

சந்தேகநபர்களின் பயணப் பொதிகளிலிருந்து 70 நவீன ரக தொலைபேசிகள், 08 சிறிய கணினிகள், 54 சிம் அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நூல் விவகாரம்

# கம்மன்பில கருத்துகள் குறித்து சீலரத்ன தேரர் கடும் விமர்சனம்

கொழும்பு, ஏப். 03

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில வெளியிட்டுள்ள நூல், ஒரு திட்டமிட்ட நாடகமாகும். இது கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களை பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியாகவே தென்படுகின்றது. கம்மன்பிலவின் கருத்துக்கள் அர்த்தமற்றவை என்பதாலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அந்த இடத்தை விட்டுச் சென்றார் என்று பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் சீலரத்ன தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சரோ அல்லது மக்கள் பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பொலிஸ் உயர் மட்ட அதிகாரிகளோ அழைக்கப்படாமை பாரிய சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

உண்மையாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அக்கறை இருந்திருந்தால் இந்த நூல் தொடர்பில் உரிய விசாரணை அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு எந்தவித உத்தியோக பூர்வ தரப்பினரும் இன்றி இவ்வாறானதொரு நூலை வெளியிடுவது யாரைப் பாதுகாப்பதற்கான முயற்சி?

உதய கம்மன்பில என்பவர் இருவேறு நிலைப்பாடுகளைக் கொண்ட ஒரு நபர். கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எரிசக்தி அமைச்சராக இருந்து கொண்டு எரிபொருள் வரிசைகளை உருவாக்கி இறுதியில் மக்களிடம் இருந்து தப்பித்துக்கொண்டவர்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் தற்போது வரிசையாக அமர்ந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை கேட்பது வேடிக்கையாக உள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக விரல் நீட்டுவதை விடுத்து அன்றைய காலப் பகுதியில் ஏன் மௌனமாக இருந்தீர்கள்? என்பதை முதலில் வெளிப்படுத்த வேண்டும்- என்றார். (எ)

# நீர்த்தேக்கத்தில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு!

கண்டி, ஏப். 03

கண்டி - தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புக்கந்துர பகுதியில் உள்ள விக்றோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது என்று தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞன் தலாத்துஓயா பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எந்தவொரு குழந்தையும் துன்புறுத்தப்படக்கூடாது

## கல்வி அமைச்சு புதிய சுற்றறிக்கை

கொழும்பு, ஏப். 03

எந்தக் காரணத்துக்காகவும் எந்தக் குழந்தையும் உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ துன்புறுத்தப்படக்கூடாது என்று பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பில் கல்வி அமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையானது, அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள், கோட்ட மட்ட பணிப்பாளர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்பின் ஒரு பகுதியை மேற்கோள் காட்டி இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தண்டனையாகவோ அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவும் எந்தக் குழந்தையும் உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ துன்புறுத்தப்படக்கூடாது என்றும், எந்த நிலையிலும் எந்தவிதமான உடல் ரீதியான தண்டனையும் விதிக்கப்படக்கூடாது என்றும், தவறு செய்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கத்தை பேணுவது தொடர்பான விஷயங்களை கையாளும்போது, சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# நாட்டின் சில இடங்களில் இன்று ஓரளவு கனமழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 03

அடுத்த சில நாட்களுக்கு, இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் இடியுடன் கூடிய மழைக்கு சாதகமான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் மேற்கு, மத்திய, சப்ரகமுவ, தெற்கு, ஊவா, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பிற்பகல் 2 மணிக்கு மேல் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், குருநாகல் மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கு மேல் ஓரளவு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தென் மாகாணத்திலும், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் காலையில் மழை பெய்யக்கூடும்.

அதிகாலை நேரங்களில் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் மூடுபனி நிலவக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழையின் போது, தற்காலிகமாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் வீசும் பலத்த காற்று மற்றும் மின்னலால் ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு, பொதுமக்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வாகன விபத்துக்களில் சிக்கி மாணவன் உட்பட நால்வர் பலி!

கொழும்பு, ஏப். 03

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர்.

புத்தளம் - சாலியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் - திருகோணமலை வீதியில் 16 ஆவது மைல்கல் பகுதியில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 78 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் நோக்கி பயணித்த லொறி ஒன்று, அதே திசையில் பயணித்த சைக்கிள் மீது மோதி இந்த விபத்து சம்பவித்தது.

இதேவேளை, தலைமன்னார் - மதவாச்சி வீதியில் குடியிருப்பு சந்திக்கு அருகில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நாவற்குடா பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில், வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்காக வந்திருந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

காத்தான்குடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 22 வயதுடைய இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அத்துடன், மட்டக்களப்பு - மயிலம்பாவெளி பிரதான வீதியில் புதன்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 10 வயது பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

மயிலம்பாவெளி விபுலானந்த வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்று வந்த மாணவனே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

மயிலம்பாவெளி கொம்புப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்த உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. உற்சவம் முடிந்த பின்னர் தனது சகோதரனுடன் சிறுவன் வீடு நோக்கித் திரும்பினான். இதன்போது பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில், மட்டக்களப்பிலிருந்து பொலநறுவை நோக்கி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சிறுவன் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டார். (எ)

# வான் வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது

## ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் படுகாயம்

நுவரெலியா, ஏப். 03

கொத்மலை, கெரண்டி எல்ல பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பயணித்த வான் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 70 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் வானில் பயணித்த ஐவர் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் காயமடைந்த ஒருவரை பார்வையிட்டு விட்டு மீண்டும் கொத்மலை தவலந்தென்ன நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து நேர்ந்தது.

வானில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் மற்றும் ஒரு விற்பனை உதவியாளர் பயணித்ததாகவும், வான் உரிமையாளரே அதனை ஓட்டிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதன் காரணமாகவே வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த வான் உரிமையாளரின் மகன் பிரதான வீதிக்கு வந்து, அந்த வழியாக சென்ற கப் ரக வாகனத்தை நிறுத்தி, தனது தாய், தந்தை மற்றும் உதவியாளரை மருத்துவமனையில் அனுமதிக்க உதவி கோரியுள்ளார்.

பின்னர் இது குறித்து கொத்மலை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (எ)

# "அனைவருக்கும் இல்லம்"



இரத்தினபுரி, ஏப். 03

"வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய "அனைவருக்கும் இல்லம்" தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைய இறக்குவானை, கொட்டலை, பலவின்ன, பிபிலேகம பிரதேசங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பங்கேற்புடன் நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன. (எ)

# வயல்வெளியில் சடலம் மீட்பு: பொலிஸார் தீவிர விசாரணை

சம்மாந்துறை, ஏப். 03

அம்பாறை- சம்மாந்துறை அல்-அமீர் பாடசாலையின் பின்புறம் உள்ள வயல்வெளியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த சடலம் மீட்கப்பட்டது.

சம்மாந்துறை சாலி வீதியைச் சேர்ந்த, 50 வயது ஆதம்பாவா றியால் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (எ)

# தரமற்ற நிலக்கரி விவகாரத்துக்காக ஜனாதிபதி சிறை செல்ல நேரிடும்

## தயாசிறி எம். பி. எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 03

தரமற்ற நிலக்கரி கொள்வனவினால் தான் மின்கட்டணம் உயர்வடைந்துள்ளது. மின்கட்டணத்தை மேலும் 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு புதிய நிறுவனங்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளன. தரமற்ற நிலக்கரி விவகாரத்துக்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி உட்பட அமைச்சரவை, மோசடியுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் சிறை செல்ல நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எச்சரித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வலுசக்தி துறையில் அரசாங்கம் பாரியதொரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை மேம்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கைகளையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. சூரிய மின்சக்தித் திட்டத்தை அரசாங்கம் பலவீனப்படுத்தியுள்ளது.

நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது சூரிய மின்சக்தித் திட்டத்தில் ஒரு அலகுக்கு 34 ரூபாய் அளவில் செலுத்தப்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் தொகை 15 முதல் 19 ரூபாயாக குறைக்கப்பட்டது.

மின்சார சபையின் சுயாதீனத்தை பாதுகாக்க வேண்டும் என்று ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மின்சார சபையை கலைத்து அதன் பொறுப்பு மற்றும் கடமைகளை நான்கு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளார். எந்த நிறுவனங்கள், எந்த பணியை செய்கின்றன என்பது சந்தேகத்துக்கிடமாகவே காணப்படுகிறது.- என்றார். (எ)

# மகிந்த விஜேசேகர காலமானார்

கொழும்பு, ஏப். 03

முன்னாள் அமைச்சர் மகிந்த விஜேசேகர நேற்றுக் காலை காலமானார். அவருக்கு வயது 83 ஆகும்.

மாத்தறை, கொடபிட்டியவில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் காயமடைந்து, நீண்ட காலமாக நோய்வாய்ப் பட்டிருந்த நிலையிலேயே மகிந்த விஜேசேகர காலமானார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணிகள்...

அரசாங்க நில அளவையாளர் வ. நிதர்சனால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலின்படி, காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேற்று காலை 9:00 மணியளவில் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்தன.

குறித்த நிலமானது இராணுவ முகாம் அமைப்பதற்காகவே சுவீகரிக்கப்படுவதை அறிந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் திரு. சுப்பிரமணியம் சுரேன், இந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி, நேற்று காலை 8.00 மணி முதல் காணி உரிமையாளர்களும் பொதுமக்களும் ஒன்றுகூடித் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்-

“பச்சிலைப்பள்ளி பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில், அவற்றை இராணுவத் தேவைகளுக்காக வலுக்கட்டாயமாக அளவீடு செய்யும் முயற்சி இன்று முன்னெடுக்கப்பட்டது. தமது பூர்வீக நிலங்களை இழந்து நிற்கும் உரிமையாளர்களும், அவர்களுக்கு ஆதரவாக நாங்களும் இணைந்து இந்த அநீதியான அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தினோம்.

தமிழ் மக்களின் பெரும்பான்மையான நிலப்பரப்புகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. இன்றும் தமிழ் மக்கள் ஒரு “திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள்” வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு இத்தகைய நில ஆக்கிரமிப்பு முயற்சிகளே சான்றாகும். சொந்தக் காணி இல்லாமல், அருகில் உள்ள பள்ளமான பகுதிகளில் தற்காலிகமாக வசிக்கும் மக்கள், மழைக்காலங்களில் வெள்ள அனர்த்தத்தினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் வரை எமது ஜனநாயகப் போராட்டங்கள் தொடரும்,” எனத் தெரிவித்தார்.

மக்களின் இடைவிடாத எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து, நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறியதுடன், நேற்றைய அளவீட்டுப் பணிகளும் நிறுத்தப்பட்டன.

குறித்த போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் செயலாளர் நாயகம் முருகேசு சந்திரகுமார், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பிரதேச சபைகளின் கௌரவ உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## தமிழ் தேசிய...

ஒன்றிணைத்து, கடந்த 2 ஆம் திகதி கொழும்பில் முதலாவது சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, சமஷ்டி முறையிலான அரசமைப்புக்கான சமூக ஒப்பந்தமொன்றைத் தயாரித்தல் மற்றும் இனப்பிரச்னைத் தீர்வில் தனித்துக் செயற்படுவதில்லை போன்ற முக்கிய இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையை கடந்த 19 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட நெருக்கடி நிலைகள் காரணமாக அச்சந்திப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சூழலில், தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களான க.ச. இரத்தினவேல், வி. புவிதரன், பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், சுகந்தி இராஜகுலேந்திரா, வ.ச.நிறைஞ்சன், ஞா.க. ரனித்தா மற்றும் ம. யூட் டினேஷ் ஆகியோர் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் கூடி இது குறித்து ஆராயவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளின் வசதியைப் பொறுத்து, இந்த இரண்டாவது தீர்க்கமான சந்திப்பு அடுத்த வாரத் தொடக்கத்தில் நடைபெறுவதற்கான அதிக சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகத் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## அமைச்சர்கள்...

நிதியமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது நிலவும் எரிசக்தி நெருக்கடி மற்றும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில், அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சரவையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சு வெளியிட்டுள்ள புதிய வழிகாட்டல்களின் படி, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் இனி 2026 மார்ச் 01 ஆம் திகதி நிலவிய எரிபொருள் விலையின் அடிப்படையிலேயே கணக்கிடப்படும்.

எரிபொருள் அளவுகளுடன் தொடர்புடைய ஏனைய கொடுப்பனவுகளும் இதே அடிப்படை விலையைப் பயன்படுத்தியே மீளக் கணக்கிடப்படவேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

# நிலக்கரி மோசடியின் பின்னணியில் அநுர!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 03

நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலக்கரி ஊழல் மோசடியாளர்களையும், அதற்குப் பொறுப்பானவர்களையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் முந்தைய “நல்லாட்சி” அரசாங்கத்தைப் போலவே இருப்பதாக விமர்சித்த நாமல் ராஜபக்ஷ, பிக்பொக்கெட் அடித்தவனே “திருடன் திருடன்” என கூச்சலிட்டுக்கொண்டு ஓடுவது போன்ற நாடகத்தையே அரசாங்கம் அரங்கேற்றுவதாகக் கூறினார்.

நிலக்கரி ஊழலில் ஈடுபட்டவர்களை ஜனாதிபதி பாதுகாத்து வருவதாகவும், அவர் விவசாய அமைச்சராக இருந்த காலத்தில் அமைச்சுக்குக் கொண்டுவரப்பட்ட நபரே இன்று இந்த நிலக்கரி ஊழலுக்கும் பின்னணியில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஒருவரை தற்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமித்து, தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்து இந்த ஊழல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், ஜனாதிபதியின் நடத்தையையும் அறிக்கைகளையும் பார்க்கும்போது இந்த ஊழலின் பின்னணியில் அவரே இருக்கிறார் என்பது தெளிவாகிறது எனத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு குறித்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எந்தவொரு கவலையும் இல்லை எனச் சுட்டிக்காட்டிய நாமல் ராஜபக்ஷ, எரிபொருள் விலை உயர்ந்தாலும் அதற்கேற்ப அரச ஊழியர்கள், வைத்தியர்கள் அல்லது அத்தியாவசிய சேவை வழங்கும் அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டில் நெல் அறுவடை செய்யப்படும் காலத்திலேயே அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் முற்படுவது விவசாயிகளை நடுத் தெருவில் நிறுத்தும் செயலாகும் எனவும் அவர் எச்சரித்தார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் தமது அரசாங்கம் மக்களுக்கு 5,000 ரூபா நிவாரணத்தை பலமுறை வழங்கியதை நினைவு கூர்ந்த அவர், தற்போதைய அரசாங்கம் நிலக்கரி ஊழலால் ஏற்பட்ட நஷ்டத்தை மக்கள் மீது சுமத்தி, மின்சாரக் கட்டணம் மற்றும் வரிச் சுமைகளை அதிகரிப்பதாகக் குற்றம் சாட்டினார். (அ)

---

அனைத்து அரச திணைக்களங்களும் நிறுவனங்களும் தற்போதைய சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க, இந்த மாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## மனோ கணேசன்...

மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்தும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடி க்கைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக கலந்து ரையாடப்பட்டதுடன், அந்த அனைத்துப் பிரச்னைகள் குறித்தும் ஜனாதிபதி இங்கு விசேட கவனம் செலுத்தினார்.

மேலும், மலையகப் பாடசாலைகளில் நிலவு கின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய் வதற்கு, தகுதியான தமிழ் மொழி மூல ஆசிரியர்களை விரைவாக ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களான பி. திகம்பரம், வி. ராதா கிருஷ்ணன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலர் இச்சந்திப் பில் கலந்துகொண்டனர். (அ)

## அர்ச்சுனா...

மன்றில் முன்னிலையாகவில்லை. அதனை அடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு திகதியிட்ட மன்று அன்றைய தினம் குற்றம் சாட்டப்பட்டுள்ள அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்ட இருவரையும் மன்றில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தியுள்ளது. (அ)

## பொருளாதார...

முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நீடிக்கப்பட்ட கடன் வசதித் திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளின் தற்போதைய நிலை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், நாட்டின் பொருளாதாரம் முன்னைய நிலையை விட அதிக தாங்கும் திறன் கொண்டதாக மாறியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் எரிபொருள் விலை மற்றும் வலுசக்தி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள வெளிப்புற சவால்கள் குறித்து ஜனாதிபதி இதன்போது விளக்கமளித்தார்.

இந்தச் சவால்களுக்கு மத்தியிலும், பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு அரசு முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களைச் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

தற்போது எட்டப்பட்டுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மையை நீண்ட காலத்துக்குத் தக்கவைத்துக் கொள்வதோடு, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் எஞ்சிய இலக்குகளை அடைவதற்கான எதிர்கால நகர்வுகள் குறித்தும் இருதரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்பாட்டுத் தலைவர் ஈவான் பாபஜோர்ஜியு தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசின் சார்பில் தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். (அ)

## வீடு தீக்கிரை...

அயலவர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அதனை அணைப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்தபோதும் அது பலனளிக்காத நிலையில் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். குறித்த விபத்தினால் வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

மின்சார ஒழுக்கு காரணமாக வீட்டில் தீ ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஏப்ரல் 16 , 17...

வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இக்கூட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு: -

அரச நிறுவனங்களில் எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனாக, கடந்த மார்ச் 31 ஆம் திகதி வரை சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தனது டீசல் நுகர்வை 42 வீதத்தினால் குறைத்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வலுசக்தி முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வுத் திட்டங்கள் எதிர்வரும் ஏப்ரல் 7 மற்றும் 9 ஆம் திகதிகளில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

பல்கலைக்கழகங்கள் இயலுமான சந்தர்ப்பங்களில் இணையவழி ஊடாகத் தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடர்கின்றன.

கிராம உத்தியோகத்தர் நுழைவுப் பரீட்சை உள்ளிட்ட திட்டமிடப்பட்ட பரீட்சைகள் முறையாக நடத்தப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது. போக்குவரத்து, டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் நீதி அமைச்சு உள்ளிட்ட துறைகள் அத்தியாவசிய ஊழியர்களைக் கொண்டும், இணையவழி முறைமைகளைப் பயன்படுத்தியும் சேவைகளைத் தடையின்றி வழங்கி வருகின்றன.

நீர் விரயமாவதைத் தவிர்ப்பதற்கும், மாற்று நீர் மூலங்களைப் பயன்படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விசேட பிரச்சாரமொன்றைத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

இணையவழி ஊடாகக் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான வழிகாட்டல்களை டிஜிற்றல் பொருளாதார அமைச்சு ஏற்கனவே தயாரித்துள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ சுற்றுநிருபம் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படவுள்ளது.

நாளாந்த வலுசக்தி நுகர்வு, எரிபொருள் கையிருப்பு மற்றும் அரச ஊழியர்களின் வருகை போன்றவற்றைத் துல்லியமாகக் கண்காணிப்பதற்கு டிஜிற்றல் முறையிலான டாஸ்போர்ட் ஒன்றை அறிமுகப்படுத்துவது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

இக்குழுவின் அடுத்தக்கட்டச் சந்திப்பு எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# அமெ. ஜனாதிபதி ட்ரம்பை அரசு பகைத்துக்கொள்ளாது!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 03

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பகைத்துக்கொள்ளும் எந்த தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்காது. ஆகவே ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை அரசாங்கம் கொள்வனவு செய்யாது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தாண்டு நாட்டு மக்களுக்கு சுபமானதாக அமையாது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் மோதலை குறிப்பிட்டுக் கொண்டு எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து தற்போது மின்கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற மோசடி மற்றும் தரமற்ற நிலக்கரி கொள்வனவினால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீண்டும் மின்கட்டணம் உயர்வடையும் சாத்தியம் காணப்படுகிறது.

நீர் மின் உற்பத்தியை குறைத்து எரிபொருள் மற்றும் நிலக்கரி ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவே அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கான விலைமனு கோரல்கள் அரசாங்கத்துக்கு இணக்கமான தரப்பினருக்கே வழங்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது. எதிர்காலத்தில் வலுசக்தி துறை பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும்- என்றார். (அ)



# கைபேசி ஊடாக நடக்கும் நிதி மோசடி நடவடிக்கை!

## மக்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 03

கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரும் சந்தேகத்திற்கிடமான குறுஞ்செய்திகள் மற்றும் இணைய இணைப்புகள் குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக குறுஞ்செய்திகள் ஊடாக முன்னெடுக்கப்படும் நிதி மோசடிகள் மற்றும் சைபர் தாக்குதல்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிஸ் வெளியிட்டுள்ள வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

உங்களுக்கு வரும் குறுஞ்செய்திகளில் உள்ள இணைய இணைப்புகளை கிளிக் செய்வதற்கு முன்னர், அதன் இறுதிப் பகுதியை நன்கு அவதானிக்க வேண்டும்.

குறிப்பாக .நேவு, .ஒலுணு மற்றும் .ஊஊஊ போன்ற வழமைக்கு மாறான முனைகளைக் கொண்ட இணைய இணைப்புகளைத் திறக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான இணைய முகவரிகள் பெரும்பாலும் தனிநபர் தரவுகளைத் திருடுவதற்கும், வங்கி கணக்குகளில் உள்ள பணத்தை மோசடி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

அறிமுகம் இல்லாத நபர்களிடம் இருந்து வரும் இவ்வாறான செய்திகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை எக்காரணம் கொண்டும் கிளிக் செய்ய வேண்டாம் என்றும் பொலிஸ் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# இலக்கை தாண்டியது மதுவரி வருமானம் 190 பில்லியன் ரூபாயைக் கடந்து சாதனை!

கொழும்பு, ஏப்.3

இலங்கையில் மதுபான போத்தல்களுக்குப் பாதுகாப்பு ஸ்டிக்கர்களை ஒட்டும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் மதுவரித் திணைக்களத்தின் வருமானம் 60 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மதுபான வகைகளுக்கும் உரிய வரி அறவிடப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பாதுகாப்பு ஸ்ரிக்கர் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், மதுவரித் திணைக்களம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாகக் கணிசமான உயர்வைச் சந்தித்துள்ளது.

இதன்படி 2025 ஜனவரி 1 முதல் செப்ரெம்பர் 30 வரை 190 பில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது. இது அரசாங்கம் நிர்ணயித்த 177 பில்லியன் ரூபாய் இலக்கை விட 13.4 பில்லியன் ரூபாய் அதிகமாகும்.

இது தொடர்பில் முன்னாள் மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.பி.என்.ஏ. பெமவரத்ன குறிப்பிடுகையில், 2025ஆம் ஆண்டின் இதுவரையான வருமானம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் 107 வீதத்தைத் தாண்டியுள்ளதுடன், 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது-என்றார்.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில், சில மதுபான உற்பத்தியாளர்கள் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டத் தவறியதால், கிடைக்க வேண்டிய வரி வருமானத்தில் சுமார் 50 வீதம் இழக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சமையல் எரிவாயு விலை மாற்றம் 5 ஆம் திகதியே இறுதித் தீர்மானம்

கொழும்பு, ஏப். 03

சமையல் எரிவாயு விலை திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானத்தை எதிர்வரும் 5 ஆம் திகதி வெளியிடவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்திற்கான எரிவாயு விலைத்திருத்தம் தொடர்பில் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவிக்கையில்-

புதிய விலை திருத்த பட்டியல் நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், நிதி அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன், புதிய விலைத் திருத்தம் அறிவிக்கப்படும்-என்றார்.

அதுவரை, தற்போது விற்பனை செய்யப்படும் விலையில் எந்தவித மாற்றங்களும் ஏற்படாது. இதனிடையே, நாட்டின் நுகர்வுக்குத் தேவையான சமையல் எரிவாயு போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாகவும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பதற்காக பாடசாலை அனுமதியை மறுக்க முடியாது!

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்

கொழும்பு, ஏப். 03

பிறப்புச் சான்றிதழ் இல்லையென்ற காரணத்திற்காக எந்தவொரு பிள்ளையையும் பாடசாலையில் சேர்க்க மறுக்க முடியாது என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேச செலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லாதது அவர்களின் பெற்றோரின் தவறு என்பதால், அதிகாரிகள் அந்த விடயத்தில் ஒதுங்கியிருக்க முடியாது.

பதிவுத் திணைக்களத்தின் மூலம் பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் நடைமுறை முடியும் வரை, அத்தகைய அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைகளில் சேர்க்கப்பட வேண்டும்.

பிறப்புச் சான்றிதழ் இல்லையென்ற காரணத்திற்காக எந்தவொரு பிள்ளையையும் பாடசாலையில் சேர்க்க மறுக்க முடியாது என அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதலாம் தரத்திற்குச் சேர வேண்டிய அனைத்துப் பிள்ளைகளுக்கும், பிறப்புச் சான்றிதழ் அல்லது பிற ஆவணங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், வகுப்பறைகளில் இருக்க வேண்டும்.

கல்வி கற்பதற்கும் வகுப்பறையில் இருப்பதற்கும் ஒரு பிள்ளைக்கு இருக்கும் உரிமைக்கு பிறப்புச் சான்றிதழ் ஒரு தடையாக இருக்கக் கூடாது.

ஏற்கனவே மூன்று மாதங்கள் தாமதமாகியுள்ள நிலையில், அந்தந்த வலயங்களில் உள்ள முதலாம் தரத்திற்கு தகுதியான அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்வதை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும் - என்றார். (அ)

# குமார ஜயக்கொடிக்கு எதிரான பிரேரணை

கொழும்பு, ஏப். 03

அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் நாளில், ஆளுங்கட்சியைச் சேர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பிலேயே தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்கள் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு அன்று மாலை நடைபெறும்.

இதற்கிடையில், பெரும்பாலான எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க ஒப்புக்கொண்டுள்ளன. எரிசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்தது.

# தனியார் பஸ் சாரதிக்கு 2500 ரூபா தண்டப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் பஸ் ஒன்றில் பயணியொருவரிடம் மேலதிக கட்டணம் அறவிட்ட நடத்துநருக்கு 2,500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடப் போவதில்லை என அவரிடமிருந்து எழுத்துமூல உறுதிமொழியும் பெறப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த தனியார் பஸ்ஸில் பயணித்த பயணியொருவரிடம் நடத்துநரால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடக் கூடுதல் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பயணியால் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் யாழ்ப்பாணப் பேருந்து நிலையப் பொறுப்பதிகாரிக்கு உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்ட துரித விசாரணைகளின்போது, சம்பந்தப்பட்ட பேருந்து நடத்துநர் குறித்த பயணியிடம் மேலதிக கட்டணம் அறவிட்டதை ஒப்புக்கொண்டுள்ளார். இதனையடுத்து அவருக்கு அதிகார சபையால் 2,500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மீண்டும் இவ்வாறான விதிமீறல்களில் ஈடுபட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டு எழுத்துமூலமான உறுதிமொழியும் பெறப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தின்போது தனியார் பேருந்துகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை விடக் கூடுதல் கட்டணம் அறவிடப்படுவது தொடர்பிலோ அல்லது பயணிகள் வேறு ஏதேனும் அசௌகரியங்களை எதிர்கொண்டாலோ, எவ்வித தயக்கமுமின்றித் தகுந்த ஆதாரங்களுடன் (பயணச்சீட்டு, ஒளிப்படங்கள் அல்லது காணொலிகள்) அதிகார சபைக்கு உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு தலைவர் சூ.விமலேஸ்வரன் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை 071 9090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்குப் பொதுமக்கள் உடனடியாகத் தெரியப்படுத்த முடியும் என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org